# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை - 2023

| தரம் : 09 | பாடம் : செயன்முறை தொழில்நுட்பத்திறன் | நேரம் : 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

**பெயர் / சுட்டெண் :**...................................

### பகுதி I

- **கவனிக்குக.**
- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- ***1* தொடக்கம் *20* வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் *(1), (2), (3), (4)* என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி (X) இடுக.**

01) செயன்முறைத் தொழினுட்பத்திறன் பாடத்தினை செயற்றிட்டரீதியாக கற்பதன் மூலம் நாம் பெற்றுக்கொள்ளக்கூடியது.
(01) அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தி
(02) அறிவு, திறன், தன்னல விருத்தி
(03) நீண்ட பொருட் செலவு ஏற்படும்.
(04) பாடத்திட்டத்தை பூர்த்தி செய்வது சிரமம்.

02) செயற்றிட்டத்தில் ‘‘காலச்சட்டகம்’’ என்பது.
(01) ஒரு கருமத்தின் ஆரம்பத்தை காட்டும் அட்டவணை.
(02) ஒரு கருமத்தின் முடிவைக் காட்டும் அட்டவணை.
(03) ஒரு கருமத்தின் ஆரம்பத்தையும் முடிவையும் காட்டும் அட்டவணை.
(04) படி முறைகளின் வெற்றி தொடர்பாக கண்டறியும் அட்டவணை.

03) திட்டமிட்டு அமைக்கக்கூடிய வீட்டுத்தோட்டத்தின் மூலம் நாம் பெற்றுக்கொள்ளக்கூடியது.
(01) பொருளாதர ரீதியாக இலாப மீட்டக்கூடிய வணிக முயற்சியாக மாற்றிக்கொள்ள முடியும்.
(02) குடும்ப அங்கத்தவருக்கு தேவையான சமனிலையான உணவை பெற்றுக்கொள்ள முடியும்.
(03) நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்க முடியும்.
(04) மேற்கூறிய யாவும் சரி

04) சமையலறையில் சமையல் நடவடிக்கைகளுக்குத் தேவையான பயிர்த் தொகுதிகளை ஒரே சாடியில் நாட்டி வளர்க்கக்கூடிய பயிர்த்தொகுதி.
(01) றம்பை, சேம்பு, புதினா
(02) றம்பை, சேம்பு, தக்காளி
(03) பெசில், றம்பை, கறிமிளகாய்
(04) இஞ்சி, மஞ்சள், கரட்

05) முளைகட்டிய வித்துக்களை எத்தனை நாட்களில் உணவாக உட்கொள்ள முடியும்.
(01) 3 – 5 நாட்கள் (02) 2 – 5 நாட்கள்
(03) 4 – 6 நாட்கள் (04) 5 – 6 நாட்கள்


kalvi.lk

06) சாடிகளில் நாட்டி தொங்கவிடக்கூடிய ஆகாயப் பயிற்செய்கை, மேற்கொள்வதன் முதன்மை அனுகூலம் ஒன்று.
(01) சுத்தமான அறுவடைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.
(02) கள்வர்களில் இருந்து பாதுகாப்பு
(03) விளைச்சல் அதிகம்.
(04) (1), (3) விடைகள் சரியானவை.

07) தும்பு தூள் நிரப்பப்பட்டு அழுத்தப்பட்ட தும்பு தூள்த் துண்டங்களைப் (Coir bricks) பயன்படுத்தி நாற்றுக்களை உற்பத்தி செய்வதன் அனுகூலங்களில் ஒன்று.
(01) உள்ளீடுகள், பராமரிப்பு செலவு குறைவு.
(02) உழைப்பு காலம் என்பன குறைவு.
(03) நீண்ட நாட்கள் பாரிய மரங்களாக வைத்து வளர்க்க முடியும்.
(04) 1, 2 விடைகள் மட்டும் சரியானவை.

08) பின்னல் வேலைப்பாடுகளுடன் தயார் செய்யப்பட்டுள்ள அலங்காரத் தாவரங்கள் எவ்வாறு அழைக்கப்படும்.
(01) கோக்கிடாமா (02) பொன்சாய் (03) நுண்பூங்கா (04) மழலையர் பூங்கா

09) கோக்கிடாமப் பயிற் செய்கையின் போது நடுகை ஊடகமான கூட்டுப்பசளை, மேல்மண் அல்லது தும்புத்தூள் கலவை கலக்க வேண்டிய அளவு.
(01) 1 : 1 (02) 1 : 2 (03) 1 : 3 (04) 1 : 4

10) இலங்கையின் தர நிர்ணயத்தைக் குறிக்கும் குறியீடு எது?
(01) SLS (02) ISO (03) PSI (04) SLT

11) இலங்கையில் பட்டகமுவ வன ஒதுக்கம் காணப்படும் மாவட்டம் எது?
(01) அநுராதபுரம் (02) குருணாகல் (03) புத்தளம் (04)

12) உயிரோட்டமான கலை நிருமாணிப்பை மேற்கொள்ளும் செயற்பாட்டின் போது நடுகை ஊடகமாக சேதனப் பசளை, தும்புத்தூள், உமிக்கரி போன்றவற்றை கலக்க வேண்டிய விகிதம் எது?
(01) 4 : 4 : 1 (02) 4 : 4 : 2 (03) 4 : 4 : 3 (04) 4 : 4 : 4

13) உள்ளூர் வெரனிய கறிமிளகாயின் வயது பின்வருவனவற்றில் எது?
(01) $4 - 4\frac{1}{2}$ மாதம் (02) $3 - 3\frac{1}{2}$ மாதம்
(03) $5 - 5\frac{1}{2}$ மாதம் (04) $2 - 2\frac{1}{2}$ மாதம்

14) தாவரங்களில் ஒட்டுதலை மேற்கொள்ளும் போது எத்தனை வாரங்களின் பின் புதிய அரும்புகள் உருவாகி ஒட்டுதல் வெற்றியளித்துள்ளது என்பதை முடிவு செய்யலாம்.
(01) 1 – 2 வாரங்கள் (02) 2 – 3 வாரங்கள்
(03) 3 – 4 வாரங்கள் (04) 5 – 6 வாரங்கள்

15) வெட்டப்பட்ட அன்னாசித் துண்டுகளை எலுமிச்சைசாறு கலந்த நீரிற்கு பதிலாக வேறு எக் கரைசல் அமிழ்த்தி வைக்க முடியும்.
(01) நைத்திரிக் அமிலம் (02) சித்திரிக் அமிலம்
(03) ஐதரேகுளோரிக் அமிலம் (04) அசற்றிக் அமிலம்

16) உற்பத்தி செயன்முறையின் போது சிறந்த உற்பத்தி நடைமுறைகளைப் பின்பற்றுதல் என்பதைக் குறிப்பிடுவது.
(01) GNP (02) GSP (03) GOP (04) GMP


kalvi.lk

17) விற்பனையின் பின்னரான வாடிக்கையாளர் சேவையை வழங்குவதன் அனுகூலம்.
   (01) நுகர்வோரை தமது உற்பத்தியில் நிலைத்திருக்கச் செய்தல்.
   (02) நுகர்வோருக்கும் குறித்த நிறுவனத்துக்குமிடையிலான இணைப்பு மேலும் விருத்தியடையும்.
   (03) உற்பத்தி தொடர்பாக நுகர்வோருக்கு நம்பிக்கை ஏற்படுத்தல்.
   (04) மேற்கூறிய யாவும் சரி.

18) கணினி மென்பொருளைப் பயன்படுத்தி செயற்திட்டமொன்றைத் தயார் செய்யும் போது செயற்றிட்டத்தை ஏனையோருக்கு வெளிப்படுத்தல் அல்லது விளக்குவதற்கு பெரிதும் பயன்படுத்தக்கூடிய மென்பொருள்.
   (01) Micro soft project
   (02) Presentation softwame
   (03) Spread sheet software
   (04) Project management soft ware

19) மீன், இறால், நண்டு, அரிசி, சோளம் என்பன அதிக அளவில் காணப்படும் மாகாணம் எது?
   (01) வடமாகாணம்
   (02) மத்திய மாகாணம்
   (03) கிழக்கு மாகாணம்
   (04) தென் மாகாணம்

20) கூட்டெருத் திரவப் பசளை தயாரிக்கும் போது சிவப்புச்சீனி, தகரத்திலடைக்கப்பட்ட மீன் என்பன பயன்படுத்துவதன் நோக்கம் யாது?
   (01) நுண்ணங்கி குடித்தொகையை கட்டுப்படுத்த.
   (02) நுண்ணங்கி குடித்தொகையை அதிகரிக்க.
   (03) நுண்ணங்கி குடித்தொகையை சம அளவில் வைத்திருக்க.
   (04) மேற்கூறிய எவையுமல்ல.

21) சமவுயரக் கோட்டில் கிளிரிசீடியா தாவர இருவேலிகளை நாட்டுவதன் மூலம் மண்ணுக்கு கிடைக்கும் அனுகூலங்களில் ஒன்று.
   (01) பசுந்தாட் பசளை கிடைத்தல்.
   (02) நிழல் கிடைத்தல்.
   (03) விறகு கிடைத்தல்.
   (04) மேற்கூறிய எவையுமில்லை.

(20 x 1 = 20 புள்ளிகள்)

## பகுதி II

- **முதலாம் வினா உட்பட மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.**
- **(பட விளக்கம் எதிர்பார்க்கப்படுகின்றது)**

**01) தரம் 9 இல் நீங்கள் செயற்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்ட செயற்பாட்டினைக் கருத்திற்கொண்டு பின்வரும் வினாக்களிற்கு விடையளிக்குக.**
1. நீர் பாடசாலையில் 1ம் தவணையில் செயன்முறைத் தொழில்நுட்ப பாடத்தில் செய்த செயற்பாடுகளினைக் குறிப்பிடுக.
2. நீர் செய்த செயற்பாட்டிற்கான காலச் சட்டகத்தினை அமைத்து காட்டுக.
3. நீர் செய்த செயற்பாட்டில் பயன்படுத்திய பொருட்கள், கருவி, உபகரணங்களைக் குறிப்பிடுக.
4. இச் செயற்பாட்டின் போது உமது அவதானிப்புக்களை படிமுறையாக எழுதுக.
5. இச் செயற்பாட்டின் போது நீர் எதிர்நோக்கிய சவால்களைக் குறிப்பிடுக.

(2 + 2 + 2 + 2 + 2 = 10 புள்ளிகள்)

**02) "செயற்திட்டத்தின் மூலம் பாடசாலைத் தோட்டத்திலிருந்து வருமான மீட்டுவோம்"**
1. செயற்றிட்டத்தின் பிரதான நான்கு கூறுகளையும் தருக.
2. பாடசாலைகளில் செயற்றிட்டத்தை முடிவுறுத்த இருக்க வேண்டிய கால அளவினைக் குறிப்பிடுக.
3. பாடசாலைத் தோட்டங்களினூடாக மேற்கொள்ளக்கூடிய செயற்றிட்டங்களுக்கான உதாரணம் இரண்டு தருக.
4. பாடசாலையில் நீர் மேற்கொண்ட செயற்றிட்டத்தின்பால் மற்றவர்களின் கவனத்தினை ஈர்ப்பதற்காக உம்மால் மேற்கொள்ளக்கூடிய உத்திகள் எவை?
5. எவ்வாறான இணையத்தள உலாவி (Web Browser) மூலம் விவசாய உற்பத்திகள் தொடர்பான தகவலை அறியலாம்.

(2 + 2 + 2 + 2 + 2 = 10 புள்ளிகள்)


kalvi.lk

**03) "நுகர்வோரின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் தரமான சுகாதார ரீதியான உணவை உற்பத்தி செய்வோம்"**

1. உணவுடன் தொடர்புடைய கைத்தொழில்கள் நிலைத்திருப்பில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் இரண்டு குறிப்பிடுக.
2. உணவு நுகர்வு தொடர்பாக நுகர்வோரிடம் காணப்படும் எதிர்பார்ப்புகள் இரண்டு தருக.
3. சிறந்த உணவு உற்பத்தி பழக்கங்கள் நான்கு எழுதுக.
4. பொருட்களைப் பொதியிடுவதால் கிடைக்கும் பயன்கள் நான்கு குறிப்பிடுக.
5. சுட்டுத்துண்டு ஒன்றில் காணப்படும் விடயங்களினை குறிப்பிடுக.

*(2 + 2 + 2 + 2 + 2 = 10 புள்ளிகள்)*

04) "இரசாயனம் அல்லாத முறைகளைப் பின்பற்றி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவேர்"

1. பூச்சி பீடைகளை விரட்டக்கூடிய உயிரியல் கட்டுப்பாட்டு தாவர வகைகள் இரண்டு குறிப்பிடுக.
2. உள்ளூர் பயிர் பேதங்களை நடுவதன் அனுகூலம் இரண்டு தருக.
3. பயிற்ச்செய்கையின் போது நீரினால் ஏற்படும் சேதத்தைக் குறைத்துக் கொள்ளக்கூடிய விவசாய ஒழுங்கு முறைகள் நான்கு குறிப்பிடுக.
4. எளிய நீர் வடிகட்டியின் மாதிரியொன்றின் அமைப்பினை வரைந்து குறித்துக் காட்டுக.
6. சேதனத் திரவப் பசளைகளுக்கு உதாரணம் தருக. *(2 + 2 + 2 + 2 + 2 = 10 புள்ளிகள்)*

Education கல்வி அධ්‍යාපන




Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP
075 287 1457